THE HINDU 14 JAN 2025

# First randomisation of polling staff held in Erode


Each polling booth will have a presiding officer and three polling officers. Thus, 284 presiding officers and 852 polling officers were randomised, as well as 58 additional polling officers

The Hindu Bureau
ERODE

The first randomisation of 1,194 polling staff, who will be deployed in 237 polling stations during the bypoll to Erode (East) Assembly constituency on February 5, was held at the Collectorate on Sunday.

District Election Officer and Collector Raja Gopal Sunkara, in the presence of Returning Officer and Corporation Commissioner N. Manish, carried out the process in the portal of Election Commission of India and allotted duty to polling staff.

Mr. Raja Gopal Sunkara said 284 polling stations, including reserve polling stations of 20%, were established for the bypoll.



District Election Officer and Collector Raja Gopal Sunkara carrying out the randomisation of polling staff for the Erode (East) bypoll at the Erode Collectorate.

Each polling booth would have a presiding officer and three polling officers. Thus, 284 presiding officers and 852 polling officers were randomised in polling stations. Also, 58 additional polling officers where there were over 1,200 electors were randomised. "A total of 1,194 polling staff will serve at the polling stations," he added. The Collector said first training for the staff will be held at Dr. R.A.N.M. Arts and Science College at Rangampalayam on January 19 and preparatory works are on.

**EVMs randomised**

The randomisation of electronic voting machines (EVMs) was completed at the Collectorate on Monday. The Collector said that first-level checking of 480 ballot units, 480 control units and 480 voter verifiable paper audit trails (VVPATS) were completed. A total of 284 ballot units, 284 control units and 308 VVPATs, including reserves, that will be used in 237 polling stations were randomised and kept ready.

Returning Officer for the constituency and Corporation Commissioner N. Manish, District Revenue Officer S. Santhakumar, and officials were present.

Scanned with OKEN Scanner

THE HINDU 14 JAN 2025

# Six candidates file nominations for bypoll

The Hindu Bureau
ERODE

Six candidates filed their nomination papers on Monday to contest the bye-lection for the Erode (East) Assembly constituency for which polling is scheduled on February 5.

Returning Officer and Corporation Commissioner N. Manish received the nominations from candidates between 11 a.m. and 3 p.m. at the Corporation office. The papers of candidates, upon entering the office, were verified and allowed to file their papers.

Independent candidates who filed their nominations were P. Esakimuthu Nadar of Chennai, H. Mohammed Gaipeer of Erode, J. Gopalakrishnan of 46 Pudur, Erode and R. Rajasekaran from Dadagapatti, Salem. S. Anand of Marumalarchi Janatha Katchi from Dharmapuri and A. Mani of MGR Makkal Katchi from Ramanathapuram also filed their papers.

Nominations are not accepted from January 14 to 16 due to government holidays and January 17 is the last day for filing of nominations. DMK candidate V.C. Chandhirakumar and Naam Tamilar Katchi candidate, who is to be announced on Tuesday, are filing their nomination on January 17.

Scrutiny of the papers will take place on January 18 and the last date for withdrawing candidature is January 20. The counting of votes will take place on February 8, and the election process will conclude by February 10.


Scanned with OKEN Scanner

14 JAN 2025

THE NEW INDIAN EXPRESS

## Six more independents file papers in Erode East

Erode: Six more independent candidates filed papers to contest in the Erode East bypoll on Monday, the second day of filing nominations. Returning Officer and Corporation Commissioner Manish Narnaware received the nomination papers. So far nine independents have filed nominations. The last day for nominations is February 17. Officials did not allow two independents to file their nominations as they did not prepare their papers within the stipulated time. DMK candidate VC Chandrakumar will file his nomination on the last day.Meanwhile, District Returning Officer Raja Gopal Sunkara held a meeting with officials on Monday and discussed measures taken to prevent illegal sale of liquor and banned narcotic substances.



Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 14 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# காவல்துறை அனுமதி இல்லாததால் ரத்தானது அமைச்சரின் தேர்தல் பிரச்சாரம்

■ ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பிரச்சாரம் செய்வதற்கு, காவல்துறை அனுமதி கிடைக்காததால், அமைச்சர் முத்துசாமியின் முதல் நாள் பிரச்சாரம் ரத்து செய்யப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், திமுக சார்பில் சந்திரகுமார் போட்டியிடுகிறார்.

இவருக்கு ஆதரவு திரட்டும் வகையில், நேற்று முன்தினம் (12-ம் தேதி) மாலை முதல், வீட்டுவசதித்துறை அமைச்சர் முத்துசாமி மற்றும் நிர்வாகிகள், பெரியார் நகர் பகுதியில், வீடு, வீடாகச் சென்று பிரச்சாரம் மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தனர்.

இதற்காக, காவல் துறையில் திமுக மாநகர செயலாளர் சுப்ரமணியம், பாதுகாப்பு மற்றும் அனுமதி கோரி கடிதம் அளித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக அனுமதி கோரி கடிதம் வழங்க வேண்டும் என்ற விதிமுறைகள் இருப்பதால் பிரச்சாரத்திற்கு அனுமதி வழங்க முடியாது என்று போலீஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, இன்று (14-ம் தேதி) பிரச்சாரம் செய்வதற்கான அனுமதி கோரி மனு அளிக்கப்பட்டுள்ளது.

இது ஏற்கப்பட்டுள்ளதால், அமைச்சர் முத்துசாமி, திமுக வேட்பாளரை ஆதரித்து இன்று பிரச்சாரத்தை தொடங்கவுள்ளார். அமைச்சரின் முதல் நாள் பிரச்சாரம் ரத்தானது திமுகவினரிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

Ministers election campaign cancelled since there is no permission granted by the police in the Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 14 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# 6 சுயேச்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நேற்று 6 சுயேச்சை வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கு இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ம் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனுத் தாக்கல், கடந்த 10-ம் தேதி தொடங்கியது. சேலம் மாவட்டம் மேட்டூரைச் சேர்ந்த பத்மராஜன் (64), 247-வது முறையாக வேட்பு மனு தாக்கல் செய்தார். இவரோடு கோவையைச் சேர்ந்த நூர்முகமது, கரூர் விநாயகம் ஆகிய இருவரும் 10-ம் தேதி மனுத்தாக்கல் செய்தனர்.


இதனிடையே விடுமுறை நாட்கள் முடிந்து, இரண்டாம் நாள் வேட்புமனுத்தாக்கல் நேற்று நடந்தது. இதில், சேலம், தாதகாப்பட்டியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ராஜசேகர் (67), ஈரோடு 46 புதூர் பகுதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (33) ஆகியோர் நேற்று மனு தாக்கல் செய்தனர். ராமநாதபுரம் மாவட்டம் சோழந்தூரைச் சேர்ந்த கஜினிமுகம்மது என்ற பானைமணி (77), மஞ்சள் குலை, இலையை பானையில் வைத்து, அதனை தலையில் சுமந்தபடி மனுத்தாக்கல் செய்ய வந்தார். இவர், 23-வது முறையாக தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

தருமபுரியை சேர்ந்த ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் ஆனந்த் (40), ஈரோடு மரப்பாலம் பகுதியைச் சேர்ந்த வாசனை திரவிய வியாபாரி முகம்மதுகைபில் (51), சென்னையில் பேப்பர் வியாபாரம் செய்யும் இசக்கிமுத்து (50) ஆகியோர் சுயேச்சையாக வேட்புமனுத்தாக்கல் செய்தனர். நேற்று மாலை வரை 6 பேர் மனுத்தாக்கல் செய்த நிலையில், இதுவரை மொத்தம் 9 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் பெறப்பட்டு வருகின்றன. காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஈரோடு சூளை பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம், ஈரோடு கருங்கல்பாளையத்தைச் சேர்ந்த தனஞ்செயன் ஆகியோர் தாமதமாக வந்ததால், மனுத்தாக்கல் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இதனால், அவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

பொங்கல் பண்டிகையை ஒட்டி இன்று முதல் 16-ம் தேதி வரை அரசு விடுமுறை நாட்கள் என்பதால், இந்த நாட்களில் வேட்புமனுக்கள் பெறப்படாது என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், வரும் 17-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய இறுதி நாளாகும்.

**பொங்கல் பண்டிகையை ஒட்டி இன்று முதல் 16-ம் தேதி வரை அரசு விடுமுறை நாட்கள் என்பதால், இந்த நாட்களில் வேட்புமனுக்கள் பெறப்படாது என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.**



• ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய, மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்தவர்களின் வாகனங்களை, பலத்த சோதனைக்கு பிறகு போலீஸார் அனுமதித்தனர்.

6 Independent candidates filed nomination in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ்
14 JAN 2025

உரிய ஆவணங்கள் இல்லாததால்

# ஜவுளி வியாபாரியிடம் இருந்து ரூ.1 லட்சம் பறிமுதல்

## தேர்தல் பறக்கும் படையினர் நடவடிக்கை

ஈரோடு

ஈரோட்டில் உரிய ஆவணங்கள் இல்லாமல் பணம் எடுத்து வந்த கேரளாவைச் சேர்ந்த ஜவுளி வியாபாரியிடம் ரூ.1 லட்சத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம் பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். ஈரோடு கருங்கல்பாளையம் சோதனைச் சாவடியில் தேர்தல் பறக்கும் படை, கண்காணிப்பு குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை தேர்தல் பறக்கும் படையினர், ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது காரில் ரூ.1 லட்சம் பணம் இருப்பது தெரிய வந்தது. இதுகுறித்து காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்திய போது, அவர் கேரள மாநிலம் மலப்புரம் பகுதியைச் சேர்ந்த ஜவுளி வியாபாரி முஸ்தபா எனத் தெரிய வந்தது.

ஈரோடு மாவட்டத்தில் ஜவுளிவாங்க வந்திருப்பதாக அவர் தெரிவித்தாலும், அவர் எடுத்து வந்த பணத்திற்கு உரிய ஆவணம் இல்லாததால், பணத்தை பறிமுதல் செய்த பறக்கும் படையினர், பணத்தை தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தனர்.

இதேபோல், குமலன் குட்டை பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் நேற்று முன்தினம் நடத்திய சோதனையில், கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் பகுதியைச் சேர்ந்த பாமக கவுன்சிலர் பப்லு என்பவர், காரில் எடுத்து வந்த ரூ.1.22 லட்சத்திற்கு உரிய ஆவணம் இல்லாததால், அத்தொகையை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

ஏற்கெனவே அரசு ஒப்பந்ததாரரிடம் ரூ.1 லட்சம் பணமும், லேத் பட்டறை உரிமையாளரிடம் ரூ.1.80 லட்சமும், பெண் ஒருவரிடம் ரூ.50,860 என மொத்தம் இதுவரை ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

The amount Rs.1 Lakh without proper documents seized from a textile trader by the flying squad.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

14 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் பிரசாரத்தின்போது

# சீமானுக்கு இடையூறு விளைவிக்க காங்கிரஸ் திட்டம்

## தேர்தல் கமிஷனிடம் நாம் தமிழர் கட்சி புகார்

சென்னை, ஜன.14–

சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கிடம் நாம் தமிழர் கட்சியின் தலைமை நிலைய செயலாளர் செந்தில்குமார் கொடுத்த புகாரில் கூறப்பட்டு இருப்பதாவது:–

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிட இருக்கும் வேட்பாளரை ஆதரித்து தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தொடர் பரப்புரை மேற்கொள்ள உள்ளார். அதற்காக தேர்தல் கமிஷனின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு, ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் கடந்த 12–ந் தேதியன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில், பரப்புரை செய்ய தொகுதிக்கு சீமான் வரும்போது அவருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் எதிர்ப்பு தெரிவிப்போம் என்று முடிவெடுக்கப்பட்டு உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியின் தலைவருக்கு, தேர்தலில் பரப்புரை செய்ய முடியாத வகையில் இடையூறு விளைவிப்போம் என்று கூறும் அவுக்கு தேர்தல் ஜனநாயகம் கேள்விக்கு உள்ளாகியுள்ளது.

எனவே இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காங்கிரஸ் கட்சியினர் மீது தேர்தல் நடத்தை விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

During the Erode East Assembly Constituency by-election campaign,
Congress plans to disturb Seeman.
'Naam Tamizhar Katchi" lodged a complaint in Election Commission.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 14 JAN 2025

இடைத்தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்ய

# காலதாமதமாக வந்ததாக இந்திய கணசங்க வேட்பாளருக்கு அனுமதி மறுப்பு

## போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு

ஈரோடு, ஜன.14-

இடைத்தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய காலதாமதமாக வந்ததாக இந்திய கணசங்க வேட்பாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டதால், போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

### காலதாமதம்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று வேட்பு மனு தாக்கல் நடைபெற்றது. தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கு முன்பாக வேட்பு மனுக்களை அதிகாரிகள் சரி பார்க்கும் பணி நடந்தது. அதன்படி நேற்று மதியம் இந்திய கணசங்கம் என்ற கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தர்மலிங்கம் என்பவர் வேட்பு மனுதாக்கல் செய்ய வந்தார். அவரது வேட்பு மனுவை அதிகாரிகள் சரி பார்த்தனர். அதன்பிறகு தர்மலிங்கம் வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்காக சென்றார்.



வேட்புமனு தாக்கல் செய்ய வந்த இந்திய கணசங்க வேட்பாளர் தர்மலிங்கத்துக்கு அனுமதி அளிக்காததால் அவர் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

ஆனால் காலதாமதமாக வேட்பு மனு தாக்கல் செய்ய வந்ததாக, அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், வேட்பாளரையும், உடன் வந்தவர்களையும் அனுமதிக்கவில்லை. அதற்கு அவர்கள், "வேட்பு மனு தாக்கல் மதியம் 3 மணி வரை நடக்கிறது. நாங்கள் 2.45 மணிக்கு அலுவலகத்துக்குள் வந்துவிட்டோம். ஆனால் வேட்பு மனு சரி பார்ப்பு என்ற பெயரில் வேண்டுமென்றே அதிகாரிகள் காலதாமதம் செய்தனர். இதுபோன்ற தாமதம் ஏற்படுவதாக இருந்தால் டோக்கன் வினியோகம் செய்திருக்க வேண்டும். எனவே எங்களை அனுமதிக்க வேண்டும்", என்று கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

### தேர்தல் ஆணையத்தில் புகார்

அதற்கு போலீசார் கூறுகையில், "தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் மதியம் 3 மணிக்குள் வேட்பு மனுவை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்ய அனுமதிக்க முடியாது", என்று திட்டவட்டமாக கூறினர். இதையடுத்து தர்மலிங்கம் வேட்பு மனுவை தாக்கல் செய்யாமல் திரும்பினார். இதுகுறித்து அவர் கூறுகையில், "ஜனநாயக முறைப்படி தேர்தலில் போட்டியிட வந்துள்ளோம். ஆனால் வேண்டுமென்றே காலதாமதம் செய்யப்பட்டது. இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்தில் புகார் தெரிவிக்க உள்ளோம்", என்றார்.

இந்த சம்பவத்தால் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

Argument with police created commotion.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 14 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# 6 பேர் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன.14-

ஈரோடு கிழக்கு தொகுதியில் நேற்று 6 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

## வேட்புமனு தாக்கல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 10-ந்தேதி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் தொடங்கியது. தேர்தல் மன்னன் பத்மராஜன், நூர் முகமது, மதுரை விநாயகம் ஆகிய 3 பேர் சுயேச்சையாக வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்தநிலையில் 2-வது நாளாக நேற்று காலை 11 மணிக்கு வேட்புமனு தாக்கல் தொடங்கியது. ஈரோடு மாநகராட்சி ஆணையாளரும், தேர்தல் நடத்தும் அதிகாரியுமான மனிஷ் தனது அறையில் வேட்புமனுக்களை பெற தயாராக இருந்தார். வேட்புமனுக்களை சரிபார்க்கவும் தனிக்குழு அமைக்கப்பட்டு இருந்தது.

## 6 பேர்


மறுமலர்ச்சி ஜனதா கட்சியின் சார்பில் மாநில பொதுச்செயலாளரும், தர்மபுரி பீடமனேரி செட்டிகாலனியை சேர்ந்தவருமான ஆனந்த் (வயது 40) என்பவரும், எம்.ஜி.ஆர். மக்கள் கட்சி சார்பில் ராமநாதபுரம் மாவட்டம் சோழந்தூரை சேர்ந்த அ.மணி என்கிற பானை மணி (80) என்பவரும் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். இதேபோல் சுயேச்சை வேட்பாளர்களாக சேலம் தாதகாப்பட்டியை சேர்ந்த ராஜசேகர் (67), ஈரோடு அருகே 46 புதூர் சஞ்சய்நகரை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (33), சென்னை நடேசன் நகரை சேர்ந்த இசக்கிமுத்து, ஈரோடு சம்பந்தர் வீதியை சேர்ந்த முகமது கைபீர் (51), ஆகிய 4 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

இதன்படி நேற்று ஒரே நாளில் 6 பேர் மனு தாக்கல் செய்தனர். மேலும், ஏற்கனவே வேட்புமனு தாக்கல் செய்திருந்த கோவை சுந்தராபுரத்தை சேர்ந்த நூர்முகமது (67) என்பவர் தனது 2-வது மனுவை தாக்கல் செய்தார். இந்த இடைத்தேர்தலில் போட்டியிட இதுவரை 9 வேட்பாளர்கள் மொத்தம் 10 வேட்புமனுக்களை தாக்கல் செய்து உள்ளனர். வேட்புமனு தாக்கலை ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

## தி.மு.க. வேட்பாளர்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று (செவ்வாய்க்கிழமை), நாளை (புதன் கிழமை), நாளை மறுநாள் (வியாழக்கிழமை) என 3 நாட்கள் விடுமுறை என்பதால் வேட்புமனு தாக்கல் நடைபெறாது. வருகிற 17-ந் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். அன்றைய தினம் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உள்ளிட்டோர் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் யார்? என்று இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவிக்கப்படும் என்று அந்த கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்து உள்ளார்.

கடந்த 2023-ம் ஆண்டு நடந்த ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 77 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 50-க்கும் மேற்பட்டவர்கள் வேட்புமனு விண்ணப்பங்களை வாங்கி சென்றுள்ளனர். எனவே 17-ந் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய அதிகமானோர் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## தலையில் குடத்துடன் வந்த சுயேச்சை வேட்பாளர்

ராமநாதபுரம் மாவட்டம் சோழந்தூரை சேர்ந்த அ.மணி என்கிற பானை மணி (வயது 80) என்பவர் எம்.ஜி.ஆர். மக்கள் கட்சி சார்பில் போட்டியிட காலிகுடத்தில் மஞ்சள் குலை வைத்து தலையில் சுமந்தப்படி வேட்புமனு தாக்கல் செய்ய வந்தார். மாநகராட்சி அலுவலக நுழைவுவாயிலில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த போலீசார் அவரை தடுத்து நிறுத்தினர். இதையடுத்து அவரிடம் இருந்த குடத்தை வாங்கி வைத்த போலீசார், அவரை மனுதாக்கல் செய்ய உள்ளே அனுமதித்தனர். அவர் சுயேச்சையாக தனது வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அதிகாரி மனிஷிடம் வழங்கினார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "26-வது முறையாக தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளேன். பொதுமக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற தேர்தலில் போட்டியிடுகிறேன்", என்றார்.

6 Candidates filed nomination in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 14 JAN 2025

### ஆவணங்கள் சமர்ப்பித்த 3 பேரிடம்

## தேர்தல் பறக்கும் படை பறிமுதல் செய்த பணம் ஒப்படைப்பு

ஈரோடு,. ஜன.14–

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. தொகுதிக்குள் பணம் மற்றும் பரிசுப்பொருள்கள் வாக்காளர்களுக்கு கொடுப்பதை தடுக்கும் வகையில் பறக்கும் படையின் நிலையான கண்காணிப்பு குழுவினர் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள். சோதனை சாவடிகளிலும் வாகனங்கள் சோதனை செய்யப்படுகிறது. அதன்படி நடத்தப்பட்ட சோதனைகளில் இதுவரை உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டது.

பணத்தை பறிகொடுத்தவர்கள் பணத்துக்கான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தால் திரும்ப வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். அதன்படி பணம் பறி கொடுத்தவர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்தனர். அவற்றை சரிபார்த்து உரியவர்களிடம் பணத்தை ஒப்படைக்க தேர்தல் நடத்தும் அதிகாரி டாக்டர் மனிஷ் உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து நிர்மலா என்பவரிடம் ரூ.50 ஆயிரத்து 860, முஸ்தபா என்பவரிடம் ரூ.1 லட்சம், சண்முகம் என்பவரிடம் ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது

The seized amount by the flying squad returned to 3 persons after the submission of proper documents.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 14 JAN 2025

### தேர்தல் பறக்கும் படையினர் சோதனை:

# ஜவுளி வியாபாரியிடம் ரூ.1 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.14-

தேர்தல் பறக்கும் படையினர் ஜவுளி வியாபாரியிடம் ரூ.1 லட்சம் பறிமுதல் செய்தனர்.



கேரள வியாபாரியிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ரூ.1 லட்சத்தை தேர்தல் பறக்கும் படையினர், தேர்தல் அலுவலர்களிடம் ஒப்படைத்த போது எடுத்த படம்.

## பறக்கும் படை

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 3 மணி அளவில் ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். சோதனையின்போது காரில் ரூ.1 லட்சம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து காரை ஓட்டி வந்தவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

## ரூ.1 லட்சம் பறிமுதல்

விசாரணையில் அவர், கேரள மாநிலம் மலப்புரம் பகுதியை சேர்ந்த ஜவுளி வியாபாரி முஸ்தபா என்பதும், ஜவுளி வாங்குவதற்காக ஈரோடு வந்திருந்ததும் தெரியவந்தது. எனினும் அவர் வைத்திருந்த பணத்துக்கு உரிய ஆவணம் இல்லை. இதனால் போலீசார் முஸ்தபாவிடம் இருந்து ரூ.1லட்சத்தை பறிமுதல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணங்கள் இல்லாமல் பணம் எடுத்து வந்த 5 பேரிடம் இருந்து மொத்தம் ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Rs.1 Lakh seized from a textile trader by the flying squad.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 14 JAN 2025

### தேர்தல் நடத்தை விதிமுறை அமலுக்கு வந்ததால்

# கலெக்டர் அலுவலகத்தில் புகார் பெட்டி வைப்பு



ஈரோடு, ஜன.14–


ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5–ந்தேதி நடக்கிறது. இதையொட்டி கடந்த 7–ந்தேதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. இதனால் திங்கட்கிழமை தோறும் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி நடத்தும் மனுநீதி நாள் முகாம், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆகியவை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் நடத்தை விதிமுறைகள் நிறைவுபெற்ற பின்னரே மீண்டும் மேற்கண்ட கூட்டங்கள் நடத்தப்படும் என கலெக்டர் ராஜகோபால் சுன்கரா அறிவித்துள்ளார். எனினும் பொதுமக்களின் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில், ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக நுழைவு வாயில் பகுதியில் புகார் பெட்டி வைக்கப்பட்டு உள்ளது. இந்த் புகார் பெட்டியில் பொதுமக்கள், முதியோர் உதவித்தொகை, வீட்டுமனை பட்டா, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, இலவச வீடு வேண்டியும் மற்றும் பல்வேறு புகார்கள் குறித்தும் மனுக்கள் போட்டு சென்றனர். மொத்தம் 46 மனுக்கள் போடப்பட்டு இருந்தன.

புகார் பெட்டியில் போடப்படும் மனுக்கள் தினந்தோறும் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி, தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்குட்பட்டு தீர்வு காணப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Complaint box kept in the Collector Office since the election code of conduct is in force.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 14 JAN 2025



ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டு உள்ள பாதுகாப்பு அறை சீல் வைக்கப்பட்டு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்ததை படத்தில் காணலாம்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு

# 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.14-

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 237 வாக்குச்சாவடி மையங்கள்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப்பதிவிற்காக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்காக தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தலா 480 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், வி.வி. பேடு, கட்டுப்பாட்டு கருவி ஆகியவை முதல் கட்ட சரிபார்ப்பு பணி கடந்த 11-ந்தேதி முடிக்கப்பட்டு, மாவட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திர கிடங்கில் தயார் நிலையில் உள்ளன. இதில் 237 வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான எந்திரங்கள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 20 சதவீதம் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் 30 சதவீதம் வி.வி.பேடு கருவிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 284 வாக்குப்பதிவு எந்திரங்கள்

அதன்படி 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு கருவிகள், 308 வி.வி.பேடு கருவிகள், இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமை தாங்கினார்.

இதில் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முஹம்மது குதுரத்துல்லா, தேர்தல் தாசில்தார் சிவசங்கர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## போலீஸ் பாதுகாப்பு

இதனிடையே இடைத்தேர்தலில் பயன்படுத்தக்கூடிய மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில், மாதிரி ஓட்டுப்பதிவு நடந்தது. இந்த பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை

284 Electronic Voting Machines allotted for the Erode East Assembly Constituency.

மனாவுடமநுப்படைக்கப்பட்டன.

இதையடுத்து நேற்று மாலையில் 284 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு கருவிகள், 308 வி.வி. பேட் கருவிகள் ஆகியன குடோனில் இருந்து போலீஸ் பாதுகாப்புடன் மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் எந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அந்த அறைக்கு சீல் வைக்கப்பட்டது. மேலும், அறையின் முன்பு துப்பாக்கி

Scanned with OKEN Scanner

தினமலர்
14 JAN 2025

# கேரள ஜவுளி வியாபாரியிடம் ரூ.1 லட்சம் பணம் பறிமுதல்

## தேர்தல் பறக்கும்படை நடவடிக்கை

ஈரோடு, ஜன.14-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலை ஒட்டி அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று அதிகாலை 3 மணி அளவில் தேர்தல் பறக்கும் படையினர் ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது காரில் ரூ.1 லட்சம் பணம் இருப்பது தெரிய வந்தது. இதுகுறித்து காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்திய போது அவர் கேரள மாநிலம் மலப்புரம் பகுதியை சேர்ந்த ஜவுளி வியாபாரி முஸ்தபா என தெரிய வந்தது.

ஈரோடு மாவட்டத்தில் ஜவுளி வாங்க வந்திருப்பதாகக் கூறினார். எனினும் பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.1 லட்சத்தை பறிமுதல் செய்த தேர்தல் பறக்கும் படையினர் அந்த பணத்தை மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் உள்ள தேர்தல் அலுவரிடம் ஒப்படைத்தனர்.

இதேபோல் நேற்று முன்தினம் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட குமலன்குட்டை பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது காரில் ரூ.1.22 லட்சம் பணம் இருந்தது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து காரில் இருந்தவர்களிடம் விசாரணை நடத்தியதில் அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் பகுதியை சேர்ந்த் பாமக கவுன்சிலர் உட்பட 3 பேர் என தெரிய வந்தது. அவர்கள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தங்கள்வார்டில்உள்ள பொதுமக்களுக்கு வழங்குவதற்காக புத்தாடை வாங்க ஈரோடு வந்ததாக தெரிவித்தனர்.

அவர்கள் கொண்டு வந்திருந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் பறக்கும். படையினர் அந்த பணத்தை பறிமுதல் செய்து மாநகராட்சி தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

ஏற்கனவே அரசு ஒப்பந்ததாரரிடம் ரூ.1 லட்சம் பணம், லேத் பட்டறை உரிமையாளரிடம் ரூ.1.80 லட்சம், பெண் ஒருவரிடம் ரூ.50 ஆயிரத்து 860 என மொத்தம் இதுவரை ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Rs.1 Lakh seized from a Kerala textile trader by the flying squad.

Scanned with OKEN Scanner

தினமலர் 14 JAN 2025



ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஓட்டுப்பதிவு மிஷின்களுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# ஈரோடு கிழக்கு தொகுதி ஓட்டுப்பதிவு மிஷின்கள் மாநகராட்சி அலுவலகத்தில் பூட்டி சீல் வைப்பு

ஈரோடு, ஜன.14-

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. அதை முன்னிட்டு ஈரோடு ஆர்டிஓ அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷின்கள் கிடங்கில் இருந்து 284 கண்ட்ரோல் யூனிட், 284 பேலட் யூனிட், 308 விவிபேட் ஓட்டுப்பதிவு மிஷின்கள் பெறப்பட்டுள்ளன.

அந்த மிஷின்கள், ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகம், பழைய கட்டிட முதல் தளத்தில் உள்ள எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷின் இருப்பு அறையில் வைத்து, அங்கீகரிக்கப்பட்ட தேசிய, மாநில அரசியல் கட்சிகள் முன்னிலையில் நேற்று மாலை (13ம் தேதி) பூட்டி சீல் வைக்கப்பட்டது.

Allotted EVMs for the Erode East Assembly Constituency were locked and sealed at Erode Corporation Office.

Scanned with OKEN Scanner

தினமலர் 14 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு போதைப் பொருள், சட்ட விரோத மது விற்றால் கடும் நடவடிக்கை

ஈரோடு, ஜன.14-

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமையில் போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் சட்டவிரோதமான மதுபானங்கள் விற்பனை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அவர் கூறியதாவது:

ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் அன்று போதைப் பொருட்களின் நடமாட்டத்தினை கட்டுப்படுத்த மாவட்ட அளவில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, டிஎஸ்பி தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. போதைப் பொருட்கள் மற்றும் மதுபானங்களை சட்டவிரோதமாக பதுக்கி வைத்தல் மற்றும் விற்பனையை தடுத்திட அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சட்ட விரோதமாக போதைப் பொருட்கள் மற்றும் மதுபானங்களை விற்பனை செய்யும் நபர்கள் மீது சட்ட ரீதியான கடுமையான நடவடிக்கை எடுத்திடவும் அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் எஸ்பி ஜவகர் உட்பட போலீசார், பள்ளிக்கல்வித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, கலால் துறை உள்ளிட்ட துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Strict action against the illegal Drugs and liquor sale due Erode East Assembly Constituency by-election.

Scanned with OKEN Scanner

தினமலர் 14 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் 2வது நாளில் 6 பேர் வேட்பு மனு தாக்கல்

ஈரோடு, ஜன.14-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 10ம் தேதி தொடங்கியது. வருகிற 17ம் தேதி வரை விடுமுறை நாட்கள் தவிர வேட்பு மனு தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொங்கல் விடுமுறை நீங்கலாக மொத்தம் 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 10ம் தேதி தொடங்கிய வேட்பு மனு தாக்கலில் சுயேச்சை வேட்பாளர்கள் 3 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இந்த இடைத்தேர்தலில் அதிமுக, பாஜ கட்சி தலைமையிலான கூட்டணி கட்சிகள் புறக்கணித்துள்ளதால் தேர்தல் களம் பரபரப்பு இல்லாமல் உள்ளது. 2 நாள் விடுமுறைக்கு பிறகு நேற்று காலை மீண்டும் வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. இதற்காக மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் அலுவலர்கள் தயார் நிலையில் இருந்தனர்.

நேற்று 6 சுயேச்சை வேட்பாளர்கள் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இதைத்தொடர்ந்து பொங்கல் விடுமுறை நாட்கள் கழித்து வருகிற 17ம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்ய இறுதி நாளாகும். அன்று திமுக சார்பில் வேட்பாளர் சந்திரகுமார் வேட்பு மனு தாக்கல் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய சுயேட்சை வேட்பாளர் ஒருவர் பானையில் மஞ்சள் குலை, வாழை இலை வைத்து சுமந்தபடி வந்தார்.

வேட்புமனு தாக்கலையொட்டி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மாநகராட்சியில் பணியாற்றும் பணியாளர்கள் கடும் சோதனைக்கு பிறகு உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். நேற்று வரை மொத்தம் 9 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து 18ம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும். 20ம் தேதி வேட்பு மனுக்கள் வாபஸ் பெற கடைசி நாளாகும். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப் படும்.

இதன்பிறகு தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்கத் தொடங்கும்.

Erode East Assembly Constituency : 6 Candidates filed nomination in on the 2nd day.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர்

14 JAN 2025

# கணினி சுழற்சி முறையில் இயந்திரங்கள் ஒதுக்கீடு

**ஈரோடு, ஜன. 14–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் ஓட்டுச்சாவடிகளில் பயன்படுத்தப்படும் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களை, கணினி சுழற்சி முறையில் முதற்கட்ட ஒதுக்கீடு செய்யும் பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று நடந்தது. கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமை வகித்தார்.

இதில் தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ், டி.ஆர்.ஓ., சாந்தகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகம்மது குதுரத்துல்லா, தேர்தல் பிரிவு தாசில்தார் சிவசங்கர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜ், கட்சி பிரதிநிதிகளாக காங்., விஜயபாஸ்கர், அ.தி.மு.க., சோழா லோகநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

EVMs allotted by computer randomisation.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர்

14 JAN 2025

## புகார் மனுக்களை சேகரிக்க கலெக்டர் ஆபீசில் பெட்டி

**ஈரோடு, ஜன. 14–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் நடத்தை விதியால், கலெக்டர் அலுவலகத்தில் திங்கள்கிழமை தோறும் நடத்தப்படும் மக்கள் குறைதீர் கூட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பிரச்னை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கு மனு தருவதற்காக, திங்கள்கிழமைகளில் கலெக்டர் அலுவலகம் வருகின்றனர். இவர்களுக்காக அலுவலக நுழைவு வாயில் பகுதியில் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. மனுக்களை அலுவலக அதிகாரிகள் பெறாத நிலையில், பெட்டியில் போட்டு சென்றனர். இந்த வகையில் நேற்று, 50க்கும் குறைவான மனுக்களே வரப்பெற்று, தொடர்புடைய துறை விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

Complaint box kept in the Collector Office.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர்

14 JAN 2025

# பறக்கும்படை சோதனை ரூ.1 லட்சம் பறிமுதல்

**ஈரோடு, ஜன. 14–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், பறக்கும் படை, வீடியோ கண்காணிப்பு குழு, நிலை கண்காணிப்பு குழு ஆகியோர் வாகன தணிக்கை உட்பட பல்வேறு சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று அதிகாலை ஈரோடு மணிக்கூண்டு சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அவ்வழியாக வந்த காரை சோதனையிட்டபோது, 1 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. கேரளா மாநிலம் மலப்புரம் பகுதியை சேர்ந்த முஸ்தபா என்றும், ஜவுளி வியாபாரியான அவர், ஈரோடு ஜவுளி சந்தைக்கு, ஜவுளி வாங்க வந்ததும் தெரியவந்தது. உரிய ஆவணங்கள் இல்லாததால், பணத்தை பறிமுதல் செய்து கருவூலத்தில் செலுத்தினர். இதுவரை ஐந்து பேரிடம், 5 லட்சத்து, 52,860 ரூபாய் கைப்பற்றப்பட்டுள்ளது.

Rs.1 Lakh seized by the flying squad.

Scanned with OKEN Scanner

**காலைக்கதிர்** 14 JAN 2025

# ஈரோடு கிழக்கில் 2வது நாளில் 7 வேட்பு மனு தாக்கல்

**ஈரோடு, ஜன. 14–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் கடந்த, 10ல் துவங்கியது. அன்றைய தினம் தேர்தல் மன்னன் பத்மராஜன், நுார்முகம்மது, கரூர் விநாயகம் என மூன்று பேர் சுயேட்சையாக மனுத்தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் இரண்டாவது நாளான நேற்று, சமூக ஆர்வலர்களான சேலம், தாதகாபட்டி சமூக ஆர்வலர் ராஜசேகர், 67; ஈரோடு 46 புதுார் கோபாலகிருஷ்ணன், 33, சுயேட்சையாக மனுத்தாக்கல் செய்தனர். இதேபோல் ராமநாதபுரம் மாவட்டம் சோழந்துார் கஜினி முகம்மது என்ற பானைமணி, 77, என்பவர், மஞ்சள் குலை, இலையை பானையில் வைத்து, தலையில் சுமந்தபடி வந்து மனுத்தாக்கல் செய்தார். இவர், 23வது முறை மனுத்தாக்கல் செய்வதாக தெரிவித்தார். தர்மபுரியை சேர்ந்த ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் ஆனந்த், 40; ஈரோடு, மரப்பாலம், வாசனை திரவிய வியாபாரி முகம்மது கைபில், 51; சென்னையில் பேப்பர் வியாபாரம் செய்யும் இசக்கிமுத்து, 50, என ஆறு பேர் சுயேட்சையாக மனுத்தாக்கல் செய்தனர். அதேசமயம் முதல் நாள் மனுத்தாக்கல் செய்த நுார்முகம்மது, கூடுதலாக ஒரு வேட்பு மனு தாக்கல் செய்தார். இதையடுத்து மனுத்தாக்கல் எண்ணிக்கை, 10 ஆக உயர்ந்தது.

இதுகுறித்து தேர்தல் அலுவலர்கள் கூறுகையில், 'முதல் நாளில் மூன்று பேர் மனு செய்த நிலையில், இரண்டாவது நாளில் ஆறு பேர் மனு செய்தனர். ஒரு சுயேட்சை மற்றொரு மனு செய்ததால், 10 ஆக உயர்ந்தது. தொடர் விடுமுறைக்கு பின் இறுதியாக வரும், 17ல் மட்டுமே மனுத்தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது' என்றனர்.

Erode East Assembly Constituency : 7 Candidates filed nomination in on the 2nd day.

Scanned with OKEN Scanner


காலைக்கதிர் 14 JAN 2025

# தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இ.வி.எம்.,கள் ஒப்படைப்பு

**ஈரோடு, ஜன. 14–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டுப்பதிவுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய மின்னணு ஓட்டுப் பதிவு (இ.வி.எம்.,கள்) உள்ளிட்ட இயந்திரங்கள், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் கடந்த, 2023ல் இடைத்தேர்தல் நடந்தபோது பதிவான இ.வி.எம்., உள்ளிட்ட இயந்திரங்கள், மாநகராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பாக இருந்தன. மீண்டும் தொகுதியில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதால், இயந்திரங்கள் அனைத்தும், தேர்தல் ஆணைய இ.வி.எம்., கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு 'பெல்' நிறுவன பொறியாளர்களால் பதிவுகள் அகற்றி, பழுது நீக்கி, அடுத்த ஓட்டுப்பதிவுக்கு தயார் செய்யப்பட்டது. பழுதானவற்றுக்கு புதிய இயந்திரங்கள் தரப்பட்டன. இவற்றில் நேற்று முன்தினம் மாதிரி ஓட்டுப் பதிவு முடிந்தது. இந்நிலையில் ஓட்டுப்பதிவுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து இயந்திரங்களும், தேர்தல் நடத்தும் அலுவலரான மனீஷிடம் நேற்று காலை ஒப்படைக்கப்பட்டன.



இதை தொடர்ந்து இ.வி.எம்., கிடங்கில் இருந்து, 284 இ.வி.எம்.,கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவிபேட் மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அறைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அறைக்கு சீல் வைக்கப்பட்டது. அங்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன், இந்த இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் இணைக்கப்படும். ஓட்டுப்பதிவுக்கு முந்தைய நாளில் அந்தந்த ஓட்டுச்சாவடிக்கு எடுத்து செல்லப்படும்.

EVMs handed over to the Returning Officer.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 13 JAN 2025



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 100 சதவித வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் சார்பில் ஈரோடு கள்ளுக்கடை மேட்டில் விழிப்புணர்வு கோலமிட்ட போது எடுத்த படம்.

SVEEP activity for 100% polling turn out.

Scanned with OKEN Scanner

மாலை மலர் 14 JAN 2025



கேரளா ஜவுளி வியாபாரியிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ரூ.1 லட்சம் பணத்தை பறக்கும் படையினர் தேர்தல் அலுவலர்களிடம் ஒப்படைத்த காட்சி.

### ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் இன்று அதிகாலை

# கேரளா ஜவுளி வியாபாரியிடம் இருந்து ரூ.1 லட்சம் பணம் பறிமுதல்

## பறக்கும் படையினர் நடவடிக்கை

ஈரோடு, ஜன. 13—

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம் பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

**சோதனை**

ஈரோடு கருங்கல்பாளையம் சோதனை சாவடியில் தேர்தல் பறக்கும் படை, கண்காணிப்பு குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இன்று அதிகாலை 3 மணி அளவில் தேர்தல் பறக்கும் படையினர் ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது காரில் ரூ.1 லட்சம் பணம் இருப்பது தெரிய வந்தது. இது குறித்து காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்திய போது அவர் கேரளா மாநிலம் மலப்புறம் பகுதியை சேர்ந்த ஜவுளி வியாபாரி முஸ்தபா என் தெரிய வந்தது.

**ரூ.1 லட்சம்**

ஈரோடு மாவட்டத்தில் ஜவுளி வாங்க வந்திருப்பதாக கூறினார். எனினும் பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.1 லட்சத்தை பறிமுதல் செய்த தேர்தல் பறக்கும் படையினர் அந்த பணத்தை மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் உள்ள தேர்தல் அலுவரிடம் ஒப்படைத்தனர்.

இதேபோல் நேற்று ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட குமலன்குட்டை பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது காரில் ரூ. 1.22 லட்சம் இருந்தது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து காரில் இருந்தவர்களிடம் விசாரணை நடத்தியதில் அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் பகுதியை சேர்ந்த பா.ம.க கவுன்சிலர் பப்லு உள்பட 3 பேர் என தெரிய வந்தது. அவர்கள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தங்கள் வார்டில் உள்ள பொது மக்களுக்கு வழங்குவதற்காக புத்தாடை வாங்க ஈரோடு வந்ததாக தெரிவித்தனர்.

எனினும் அவர்கள் கொண்டு வந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் பறக்கும் படையினர் அந்த பணத்தை பறிமுதல் செய்து மாநகராட்சி தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

**ரூ.5.52 லட்சம்**

ஏற்கனவே அரசு ஒப்பந்ததாரரிடம் ரூ.1 லட்சம் பணமும், லேத் பட்டறை உரிமையாளரிடம் ரூ.1.80 லட்சமும், பெண் ஒருவரிடம் ரூ.50 ஆயிரத்து 860 என மொத்தம் இதுவரை ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Today, early morning in Erode Manikkoondu area Rs.1 Lakh seized from a Kerala textile trader by the flying squad.


Scanned with OKEN Scanner

தினகரன் 14 JAN 2025

# கணினி சுழற்சி முறையில் வாக்குப்பதிவு; இயந்திரங்கள் முதற்கட்டமாக ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.14: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் பயன்படுத்தப்படவுள்ள 480 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், அதே அளவிலான கண்ட்ரோல் யூனிட்டுகள் மற்றும் விவிபேட் ஆகியவற்றை சரி பார்க்கும் பணி கடந்த 11ம் தேதி நடைபெற்றது. அதனை தொடர்ந்து வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் அதன் கிடங்கில் தயார் நிலையில் வைக்கப்பட்டன. இந்த நிலையில், அவற்றை கணினி சுழற்சி முறையில் வாக்குச் சாவடி மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பணி முதற்கட்டமாக நேற்று நடைபெற்றது.



▶ ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்ட மன்ற அறையில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்டமாக ஒதுக்கீடும் செய்யும் பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடந்தது.

இதில் 20 சதவீத வாக்குப்பதிவு இயந்திரங்கள், 20 சதவீத கண்ட்ரோல் யூனிட்டுகள் மற்றும் 30 சதவீதம் விவிபேட் யூனிட்கள் என மொத்தம் 284 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 284 கண்ட்ரோல் யூனிட்டுகள் மற்றும் 38 விவிபேட் யூனிட்டுகள், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் நேற்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்குத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மனிஷ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், தேர்தல் தனி தாசில்தார் சிவசங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

I Phase - Electronic Voting Machines allotted by randomisation.

Scanned with OKEN Scanner

தினகரன்

14 JAN 2025

## மனுதாக்கல் செய்ய அனுமதி மறுப்பு

நேற்று பிற்பகல் 3 மணிக்கு முன்பாக மாநகராட்சி அலுவலக வளாகத்துக்கு வந்து வேட்பு மனுவை சரி பார்க்கும் அதிகாரிகளிடம் அமர்ந்து மனுக்களை சரி பார்த்துக் கொண்டிருந்த ஈரோடு, குளை பகுதியை சேர்ந்த தர்மலிங்கம், ஈரோடு கருங்கல்பாளையம் பகுதியை சேர்ந்த தனஞ்செயன் ஆகியோர் மனுத்தாக்கல் செய்ய அனுமதிக்கப்படவில்லை. ஆனால், அவர்கள், தாங்கள் 3 மணிக்கு உள்ளாகவே மாநகராட்சி அலுவலகத்துக்கு வந்து, மனுவை சரி பார்த்து கொண்டிருந்ததாக தெரிவித்தனர். ஆனால் அதிகாரிகள் அவர்களை திருப்பி அனுப்பி வைத்து 17ம் தேதி வருமாறு கூறினர்.

Permission declined to file nomination.

Scanned with OKEN Scanner

தினகரன் 14 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# 2 நாட்களில் 9 பேர் வேட்பு மனு தாக்கல்

ஈரோடு, ஜன.14: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி 2 நாட்களில் இதுவரை 9 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 10ம் தேதி தொடங்கியது. விடுமுறை நாட்கள் தவிர்த்து 10, 13, 17ம் தேதி என 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனுத் தாக்கல் செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வேட்பு மனு தாக்கல் தொடங்கிய முதல் நாளான கடந்த 10ம் தேதி 3 சுயேட்சை வேட்பாளர்கள் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.

வேட்பு மனு தாக்கலின் 2-வது நாளான நேற்று மொத்தம் 6 பேர் மனு தாக்கல் செய்தனர். சேலம், தாதகாப்பட்டியை சேர்ந்த சமூக சேவகர் ராஜசேகர் (67) என்பவர் நேற்று சுயேட்சை வேட்பாளாரக வேட்புமனு தாக்கல் செய்தார். அவர் தேர்தலில் போட்டியிடுவது இதுவே முதல் முறை என தெரிவித்தார். தொடர்ந்து, மொடக்குறிச்சி தாலுகா, 46 புதூர், சஞ்சய் நகர் பகுதியை சேர்ந்த சமூகசேவகர் கோபாலகிருஷ்ணன் (31) சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுவதாக கூறி தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். ஈரோடு நகரில் நிலவும் போக்குவரத்து நெரிசல் மற்றும் கேன்சர் நோய் பாதிப்பு அதிகரிப்பு ஆகியவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்க திட்டங்கள் வைத்திருப்பதாகவும் கூறினார். தொடர்ந்து, தேர்தல் மன்னன் கஜினி முகமது என அழைக்கப்படும் ராமநாதபுரம் மாவட்டம், சோழந்தூர் பகுதியை சேர்ந்த பானை மணி (80) என்பவர் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட மனுத்தாக்கல் செய்தார். இது அவருக்கு 23வது தேர்தல் என தெரிவித்தார். தர்மபுரி நகரப்பகுதியை சேர்ந்த ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் ஆனந்த் (40), ஈரோடு, மரப்பாலம் பகுதியை சேர்ந்த வாசனை திரவிய வியாபாரி முகம்மது கைபில் (51), சென்னையில் பேப்பர் வியாபாரம் செய்யும், திருநெல்வேலியை பூர்விகமாக கொண்ட இசக்கி முத்து (50) ஆகியோரும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இவர்கள் தவிர, கடந்த 10ம் தேதி மனு தாக்கல் செய்த கோவையை சேர்ந்த நூர் முகம்மது கூடுதலாக ஒரு வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்தார். நேற்று மட்டும் மொத்தம் 6 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இதையடுத்து கடந்த 10ம் தேதி மனு தாக்கல் செய்தவர்களுடன் சேர்த்து இதுவரை மொத்தம் 9 பேர், 10 மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். வேட்பு மனு தாக்கல் நிகழ்வுகள் அனைத்தும் சிசிடிவி கேமராக்கள் மூலமாக பதிவு செய்யப்பட்டன. வேட்பு மனு தாக்கலையொட்டி.. மாநகராட்சி அலுவலக வளாகத்திலும், அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. வேட்பு மனு தாக்கலுக்கான இறுதி நாள் வரும் 17ம் தேதி ஆகும். தொடர்ந்து, 18ம் தேதி வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்படும். அதன் பின்னர், 20ம் தேதி வேட்பு மனுக்களை வாபஸ் பெறலாம். இதையடுத்து, பிப்ரவரி 5ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். தொடர்ந்து, 8 ம் தேதி, சித்தோட்டில் அரசினர் பொறியியல் கல்லூரியில் (ஐஆர்டிடி) வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் இரண்டாம் நாள் வேட்பு மனு தாக்கலையொட்டி மாநகராட்சி வளாகத்தில் பாதுகாப்பிற்கு போலீசார் குவிக்கப்பட்டனர்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட சுயேட்சை வேட்பாளர்கள் கோபாலகிருஷ்ணன், ராஜசேகர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

## வேட்பாளர் என தெரியாமல் வெளியேற்றிய போலீசார்



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்ய ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த பானை மணி என்பவர் நேற்று வந்திருந்தார். அவர் ஒரு பிளாஸ்டிக் குடத்தில் மஞ்சள் கொத்துகளை போட்டு எடுத்து தலையில் வைத்துக்கொண்டு வேட்புமனு தாக்கல் படிவத்தை ஒரு கையில் வைத்துக் கொண்டும், துணியாலான கைப்பையை மறு கையில் வைத்துக் கொண்டும் மாநகராட்சி வளாகத்துக்குள் வந்தார். அவர் பத்திரிக்கையாளர்கள் அமரும் பகுதிக்கு வந்து தனது குடத்தை காண்பித்து ஏதோ கூற தொடங்கினார்.

அப்போது, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் ஓடிவந்து அவரது குடத்தை எடுத்துக் கொண்டு மாநகராட்சி வளாகத்துக்கு வெளியே செல்லுமாறு வற்புறுத்தினர். மேலும், அவரது குடத்தை பிடுங்கி வளாகத்துக்கு வெளியே அவரை வலுக்கட்டாயமாக அழைத்து சென்றனர். அப்போது அவர், தான் எதற்காக வந்திருக்கிறேன் என கூறுவதை முழுமையாக கேட்காமல், பச்சை வேட்டி கட்டிக்கொண்டு வழிப்போக்கன் போலிருந்த அவரது தோற்றத்தை வைத்து வளாகத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றினர். அதை கண்டு பத்திரிக்கையாளர்கள் ஓடிச் சென்று அவரை படம் பிடித்தபோது அவரை பற்றி கேட்டனர்.

அப்போது, அவர் தான் வேட்பு மனு தாக்கல் செய்ய வந்திருப்பதாகவும், ஈரோடு மாவட்டத்தில் விவசாயத்தை காப்பாற்ற வேண்டும் என வலியுறுத்தும் விதமாக மஞ்சள் செடியை குடத்தில் வைத்து எடுத்து வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அதன் பின்னரே, அவர் சுயேட்சை வேட்பாளர் என அனைவருக்கும் தெரிய வந்தது.

Erode East Assembly Constituency : 9 Candidates filed nomination in 2 days

Scanned with OKEN Scanner

தினகரன் 14 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி சோதனை

# 5 பேரிடம் ரூ.5.52 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.14: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருள்கள் விநியோகிப்பதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் கண்காணிப்பு நிலைக்குழுவினர் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி, உரிய ஆவணங்களின்றி ரூ. 50 ஆயிரத்துக்கு மேலான தொகையை எடுத்து வந்ததாக, கடந்த 9ம் தேதி முதல் நேற்று அதிகாலை வரை 5 பேரிடமிருந்து மொத்தம் ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 கைப்பற்றப்பட்டு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில், ஈரோடு மணிக்கூண்டு பகுதியில் பறக்கும்படை அதிகாரிகள் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை சோதனையிட்டனர். அதில் ரூ. 1 லட்சம் இருந்தது தெரிய வந்தது. விசாரணையில், காரில் வந்தவர் கேரள மாநிலம், மலப்புரம் பகுதியை சேர்ந்த முஸ்தபா என்பதும், ஜவுளி வியாபாரியான அவர், ஈரோடு ஜவுளிச்சந்தைக்கு ஜவுளி வாங்க பணம் கொண்டு வந்ததும் தெரியவந்தது. இருப்பினும் பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் அதிகாரிகள் பணத்தை பறிமுதல் செய்தனர். இதுவரை மொத்தம் 5 பேரிடம் இருந்து ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 கைப்பற்றப்பட்டுள்ளது.

உரிமையாளர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அவர்களது பணத்தை திரும்ப பெற்று செல்லலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு பன்னீர்செல்வம் பார்க்கில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட பணத்தை பறக்கும் படையினர் கைப்பற்றி தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

Flying squad checking in Erode East Assembly Constituency.
5.5 Lakhs seized from 5 persons.

Scanned with OKEN Scanner

தினகரன்

14 JAN 2025

## பலத்த போலீஸ் பாதுகாப்பு

ஈரோடு, ஜன. 14: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 10ம் தேதி தொடங்கியது. நேற்று 2-வது நாளாக வேட்பு மனு தாக்கல் நடைபெற்றது. இதனையொட்டி, மாநகராட்சி அலுவலக வளாகத்தில், 20க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்ய வரும்போது, பாதுகாப்பு மற்றும் நெரிசலைத் தவிர்ப்பதற்காக, இந்த போலீசார் பாதுகாப்பு போடப்பட்டது. வேட்பாளருடன் கட்சியினர், ஆதரவாளர்கள் திரள்வதை தடுக்க, தடுப்புகள் போடப்பட்டுள்ளது. வேட்புமனு தாக்கல் செய்ய வரும் 17ம் தேதி கடைசி நாளாகும் என்பதால், திமுக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சி வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்ய உள்ளனர்.

Tight Police security in the Erode Corporation Office.

Scanned with OKEN Scanner

தினகரன்

1 4 JAN 2025

## பொது மக்களிடம் மனுக்கள் பெற பெட்டி வைப்பு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. அதன் ஒரு பகுதியாக ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை நடைபெற்று வரும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உள்ளிட்ட இதர குறைதீர் முகாம்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் பொதுமக்களிடம் இருந்து புகார்களை பெற கலெக்டர் அலுவலக வளாகத்தில் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

அங்கு போலீசாரும் வழக்கம் போல பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று கலெக்டர் அலுவலகத்துக்கு வந்த பொதுமக்கள் சிலர் தங்களது கோரிக்கை மனுக்களை அதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போட்டுவிட்டு சென்றனர். நேற்று 50க்கும் குறைவான மனுக்களையே பொதுமக்கள் பெட்டியில் போட்டுச் சென்றிருந்தனர். அவை தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

Complaint box kept in the Collector Office to receive complaints from the public.

Scanned with OKEN Scanner

தினகரன் 14 JAN 2025

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைப்பு

ஈரோடு, ஜன.14: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் பயன்படுத்தப் படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் முறையான சோதனை மற்றும் ஒதுக்கீட்டின்படி, தேர்தல் நடத்தும் அலுவலரிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ளது. இதில், பயன்படுத்தப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் கடந்த, 2023 இடைத்தேர்தலுக்கு பின்னர், மாநகராட்சி அலுவலகத்தின் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் தற்போது மீண்டும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து, அவை அனைத்தும், ஈரோடு ஆர்.டி.ஓ அலுவலக வளாகத்தில் உள்ள தேர்தல் ஆணைய கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டு, 8 பேர் கொண்ட 'பெல்' நிறுவன பொறியாளர்களின் தலைமையில், வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவாகி இருந்த வாக்குகள் அனைத்தும் அகற்றப்பட்டும், பழுதடைந்த இயந்திரங்களில் பழுது நீக்கம் செய்யப்பட்டும் வாக்குப் பதிவுக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டன. மேலும், மாற்றம் செய்யப்படவேண்டிய இயந்திரங்கள் மாற்றியும் வைக்கப்பட்டன.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாதிரி வாக்குப்பதிவு முடிந்தது. தொடர்ந்து, நேற்று அந்த இயந்திரங்கள் கணினி சுழற்சி முறையில் வாக்குச்சாவடிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதையடுத்து, நேற்று மாலையில் 284 வாக்குப் பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவிபேட் யூனிட்கள் ஆகியவை, கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மனீஷிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் அவை, மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. தொடர்ந்து, அனைவரது முன்னிலையிலும், அந்த அறைக்கு சீல் வைக்கப்பட்டு, துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. இதையடுத்து, தேர்தல் நாளுக்கு சில நாட்கள் முன்பாக, வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர், சின்னம் போன்றவை பொருத்தப்படும். தேர்தலுக்கு முந்தைய நாளில் அவை, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளுக்கு போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துச்செல்லப்படும்.

Electronic Voting Machines handed over to the Retuning Officer.

Scanned with OKEN Scanner

தினமணி 14 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: 2 நாள்களில் 9 பேர் வேட்பு மனு தாக்கல்

ஈரோடு, ஜன.13: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திங்கள்கிழமை வரை 9 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் கடந்த 10-ஆம் தேதி தொடங்கியது. முதல்நாளில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பத்மராஜன், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த நூர்முகமது, கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விநாயகம் என 3 பேர் சுயேச்சையாக மனு தாக்கல் செய்தனர்.

இரண்டாவது நாளான திங்கள்கிழமை ஈரோடு 46 புதூரைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (33) என்ற சமூக ஆர்வலர் சுயேச்சையாக மனு தாக்கல் செய்தார்.

கோபாலகிருஷ்ணன் கூறுகையில், தேர்தலில் வெற்றிபெறுவோர் மக்களுக்கு ஏதும் செய்வதில்லை. அதனால் தான் விசைத்தறி தொழில் மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. சாய ஆலைக் கழிவுகளால் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ளது. ஈரோட்டுக்குள் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. இவற்றுக்கு தீர்வு காண போட்டியிடுகிறேன் என்றார்.

ராமநாதபுரம் மாவட்டம், சோழந்தூர் கஜினிமுகமது (எ) பானைமணி (77) என்பவர் மஞ்சள் குலை, இலையை பானையில் வைத்து அதனை தலையில் சுமந்தபடி மனு தாக்கல் செய்ய வந்தார். இவர் 23- ஆவது முறையாக மனுத்தாக்கல் செய்வதாக தெரிவித்தார்.

சேலம் தாதகாபட்டியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் ராஜசேகர் (67), தருமபுரி நகரப் பகுதியைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் ஆனந்த் (40), ஈரோடு, மூரப்பாலம் வாசனை திரவிய வியாபாரி முகமது ஷகில் (51), திருநெல்வேலியை பூர்விகமாக கொண்டு சென்னையில் பேப்பர் வியாபாரம் செய்யும் இசக்கிமுத்து (50) ஆகியோர் சுயேச்சையாக மனுத்தாக்கல் செய்தனர்.

முதல்நாள் மனுதாக்கல் செய்த நூர்முகமது கூடுதலாக ஒரு வேட்பு மனுவையும் தாக்கல் செய்தார்.

பிற்பகல் 3 மணிக்குள் மாநகராட்சி வளாகத்துக்கு வந்து, வேட்பு மனுவை சரி பார்க்கும் அதிகாரிகளிடம் அமர்ந்து சரி பார்ப்பு பணியை செய்து கொண்டிருந்த ஈரோடு சூளை பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம், ஈரோடு கருங்கல்பாளையம் பகுதியைச் சேர்ந்த தனஞ்செயன் ஆகியோரை மனுதாக்கல் செய்ய அனுமதிக்காமல் அதிகாரிகள் வெளியே அனுப்பிவைத்தனர்.

வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நேரமான பிற்பகல் 3 மணிக்குள் மாநகராட்சி அலுவலகத்துக்கு வந்து வேட்பு மனுவை சரிபார்த்து கொண்டிருந்ததாக அவர்கள் தெரிவித்தும், அதனை ஏற்க மறுத்து இருவரையும் அதிகாரிகள் வெளியேற்றினர்.

திங்கள்கிழமை வரை 9 பேர் 10 வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். தொடர் விடுமுறைக்குப் பின் இறுதியாக வரும் 17- ஆம் தேதி மட்டும் வேட்பு மனுத்தாக்கல் செய்யலாம்.

Erode East Assembly Constituency : 9 Candidates filed nomination in 2 days

Scanned with OKEN Scanner